# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

*********************

## <u>இலங்கையில் இந்தி தினக் கொண்டாட்டங்கள்</u>

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் 2022 செப்டெம்பர் 14ஆம் திகதி மிகுந்த விருப்புடனும் உற்சாகத்துடனும் இந்தி தினம் கொண்டாடப்பட்டது. இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த இந்தி ஆர்வலர்கள், ஆசிரியர்கள், புலமையாளர்கள், மற்றும் மாணவர்கள் உட்பட கிட்டத்தட்ட 75பேர் பங்கேற்ற இந்நிகழ்வில் உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். இந்நிகழ்வுக்காக வருகைதந்திருந்த விருந்தினர்கள் பாரம்பரிய கண்டிய நடனத்துடன் வரவேற்கப்பட்டனர். அத்துடன் இந்தியா-இலங்கை இடையிலான மிகவும் நெருக்கமான கலாசார உறவினை பிரதிபலிக்கும் பொலிவூட் மற்றும் சிங்கள பாடல்களும் இங்கு அரங்கேற்றப்பட்டன.

2. இந்நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர், இந்தியா இலங்கை இடையிலான பல்லாயிரம் ஆண்டுகால கலாசார, மொழி, இலக்கிய மற்றும் மத ரீதியான தொடர்புகளை வலுவாக்குவதில் இந்தி மொழியினதும் இலக்கியத்தினதும் வகிபாகம் குறித்து சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் கலாசார ரீதியான இரட்டையர்களான இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் நாகரீகத்தொடர்புகளை பிரதிபலிக்கும் மங்கள விளக்கேற்றுதல் மற்றும் சரஸ்வதி வந்தனம் ஆகியவை தொடர்பாகவும் உயர் ஸ்தானிகர் நீண்ட விளக்கத்தினை இங்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. இந்திய அரசின் புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் இந்தியாவில் இந்தி மொழியினை பயில்வதற்காக தெரிவு செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 18 மாணவர்களும் இந்நிகழ்வுகளில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் இம்மாணவர்களின் பயண ஒழுங்குகள், ஆக்ராவில் உள்ள இந்தி மத்திய நிலையத்தில் (கேந்திரிய ஹிந்தி சன்ஸ்தன்) இக்கற்கைநெறியினைத் தொடர்வதற்கான கட்டணம் மற்றும் தங்குமிட வசதிகள், உள்ளிட்டவையும் முழுமையாக அனுசரணை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. 2022 செப்டெம்பர் 15 ஆம் திகதி இந்தியாவுக்கு பயணித்த இம்மாணவர்களுடன் உயர் ஸ்தானிகர் உரையாடியதுடன் அவர்களது இந்திய விஜயத்திற்கான நல்வாழ்த்துகளையும் தெரிவித்தார். .

4. இந்த இந்தி தினக் கொண்டாட்டங்களின் மற்றொரு அம்சமாக, கேந்திரிய ஹிந்தி சன்ஸ்தனில் தமது கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் இந்தி மொழிக் கற்கைப்பிரிவு மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

5. இந்தி தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இந்தி மொழியிலான கட்டுரைப் போட்டிகள், கதை சொல்லுதல், கவிதை மற்றும் பாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட போட்டிகளை சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் நாடளாவிய ரீதியில் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கவிடயமாகும். இலங்கையிலுள்ள இந்தி ஆர்வலர்கள் தமது மொழி மற்றும் இலக்கியத் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான தளத்தினை வழங்கி இந்தியினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு இந்த போட்டிகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. 2022 செப்டெம்பர் மாதம் முழுவதும் இப்போட்டிகள் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

********

**கொழும்பு**
**19 செப்டெம்பர் 2022**